**சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.**

**அ.வ எண்: 106/2011 வெங்கடேசன் (வாசா 1) தேதி: 28.04.2026.**

**வாசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

இந்த வழக்கில் 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் 2013 ம் வருடம் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் கோவில்பட்டி டி.மு. கோர்ட் OS.No. 343/1982 வழக்கில் வழங்கப்பட்ட சமாதான தீர்ப்பின்படி இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்கோரிக்கையில் கண்ட 1ம் தபசில் 3 வது இலக்க சொத்து மற்றும் 3ம் தபசில் சொத்து அவர்களுக்கு கிடைக்கப்பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், அதற்கு வாதிகளாகிய எங்கள் தரப்பில் மறுப்பு எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளோமா என்றால் அந்த வழக்கு எங்களுக்கு சம்மந்தம் இல்லாததால் நாங்கள் எந்த மறுப்பு எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.3 ஆவணம் கிருஷ்ணமூர்த்தி கிரையம் பெற்ற ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் உள்ள கிழமேல் தென்தலை 65-1/2 அடி, வடதலை 63 அடி என உள்ள அளவுகள் சரியானவை. மேற்படி அளவுகள்படி கிருஷ்ணமூர்த்திக்கு உடமைப்பட்டது என்றால் சரிதான். மேற்படி அளவுகளை நான் மறுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணம் 2ம் பிரதிவாதியின் தகப்பனார் நாராயணசாமி வாங்கிய கிரையம் ஆவணம் என்றால் சரிதான். அதில் சொத்து விபரத்தில் கிழமேல் தென்தலை 67-3/4 அடி மற்றும் வடதலை 65-1/2 அடி என உள்ளது சரிதான். அந்த ஆவணத்தில் கண்ட அளவுகளை நான் மறுக்கவில்லை. அந்த அளவுகளின் படி பிரதிவாதிகளுக்கு உடமைப்பட்டது என்றால் சரிதான். பிராதில் காட்டப்பட்டுள்ள மாதிரி வரைபடத்தில் 15 அடி

அகல பாதையில் பாதி 7–1/2 அடி தான் எதிர்கோரிக்கையில் 3ம் தபசில் சொத்து என்றால் சரியல்ல. எதிர்கோரிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட வரைபடத்தை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அது தவறாகும். பிராது மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள கிழமேல் 15 அடி அகல பாதையில் பாதி தான் எதிர்கோரிக்கையில் 3ம் தபசில் சொத்து என்றாலும், அந்த 15 அடி சொத்தைப் பொருத்து மாரியப்ப செட்டியார் வழக்கு தாக்கல் செய்தார் என்றாலும்ட, அந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட சமாதான தீர்ப்பின்படி ஏற்சகனவே கட்டப்பட்ட 9 அங்குல பொதுச்சுவரை மையமாக வைத்து அந்த சுவரின் கிழக்கு பக்க பாதி கனம் 4–1/2 அங்குலம் + 7 அடி 1–1/2 அங்குலம் = 7–1/2 மாரியப்ப செட்டியாருக்கு கிடைத்தது என்றாலும், அதேபோல காலம் சென்ற 1, 2 பிரதிவாதிகளுக்கு பொதுச்சுவர் கனம் 4–1/2 அங்குலம் அதற்கு மேற்கே 7 அடி 1–1/2 அங்குலம் ஆக மொத்தம் 7–1/2 அடி கிடைத்தது என்றாலும் சரியல்ல. பிராது 2ம் தபசில் சொத்துதான் எதிர்கோரிக்கை 2ம் தபசில் சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எதிர்கோரிக்கை 3ம் தபசில் சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அது பொதுப்பாதை ஆகும். தற்போது பொதுப்பாதை உள்ளதா என்றால் நான் பார்க்கவில்லை. பிராது வரைபடத்தில் கண்டவாறு கிழமேல் 15 அடி அகல பாதை பூமியில் கிடையாது என்றால் சரியல்ல. அந்த பாதையை பொருத்து ஏற்கனவே நீதிமன்ற சமாதானத் தீர்ப்பு என்றாலும் சரியல்ல. அந்த தீர்ப்பின் அடிப்டையில் கிழமேல் 7–1/2 அடி இந்த பிரதிவாதிகளுக்கு உடமைப்பட்டது என்றால் சரியல்ல. தாவா வழக்கினை தாக்கல் செய்ய 1998ம் வருடம் மார்ச் மாதம், 2001ம் வருடம், ஜனவரி 2009ம் வருடம், ஆகிய தேதிகளில்

வழக்குமூலம் உற்பத்தியானதற்கு ஆதரவாக நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நான் தான் அளந்தேன். அப்போது 1ம் பிரதிவாதியும் உடன் இருந்தார். நான் அளந்ததாகவும் அப்போது 1ம் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தி உடன் இருந்ததாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. வழக்குமூலம் ஏற்பட்டதாக கூறம் தேதி, வருடத்தில் எங்களுக்கு எந்த வழக்குமூலமும் ஏற்படவில்லை என்றாலும், ஆதனால் தாவா வழக்கை தாக்கல் செய்ய எந்த அறுகதையும் இல்லை என்றாலும், பிராதில் நாங்கள் கோரியுள்ள பரிகாரங்கள் எங்களுக்கு கிடைக்கக்கூடியது இல்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகளின் எதிர்கோரிக்கையை அனுமதித்து தீர்ப்பு வழங்குவதில் எனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை என்றால் சரிதான். 1989ம் வருடம் காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டுவிட்டது என்றாலும், ஆதனால் எங்கள் வழக்கு காலவரை தோசத்தால் பாதிப்படைந்துள்ளது என்றாலும், எங்கள் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.